**கவனிக்க.**– 2007.06.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1501 - 2007 ජූනි 08 වැනි සිකුරාදා - 2007.06.08

1501 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 442 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 445 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இரத்தினபுரி மாவட்டம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் பதிவாளர் பதவிகளை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006, ஒகத்து மாதம் 4 ஆந் திகதிய (வெள்ளிக்கிழமை) 1457 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் பிரசுரிக்கப்பட்டு என்னால் வெளியிடப்பட்ட இரத்தினபுரி மாவட்ட விகாக, பிறப்பு, இறப்பு பதிவார் பதவிகட்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலில், கீழ்க்குறிப்பிடப்படும் பிரிவுகளின் விண்ணப்பம் கோருதலை புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இத்தால் இரத்துச் செய்கிறேன். இப்பிரிவுகளுக்காக விண்ணப்பம் கோருவதற்காக மீண்டும் வர்த்தமானி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் |
|---|---|---|
| 1. இரத்தினபுரி | இரத்தினபுரி | சீலிமலை தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் குருவிட்ட கோரளை பிரிவின் விவாக (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி |
| 2. இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய | ஜலிலே பத்த பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அனெலன் கோரளை பிரிவின் விவாக (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி |
| 3. இரத்தினபுரி | கொலன்னா | கும்மனெ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொலன்ன கோரளை பிரிவின் விவாக (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி |

எல். கே. ரட்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, மே 15.

6-189

---

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச்செய்தல்

என்னால் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளில் வெற்றிடம் நிரப்புவற்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தல் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு பகிரங்கப்படுத்தப்படுகிறது :-

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களை ஆட்சேர்க்கும் புதிய நடைமுறையை (2006) நடைமுறைப்படுத்துவதற்காக இவ்வறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோருதலை இத்தால் இரத்துச் செய்கிறேன். இது தொடர்பாக இதுவரை விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அவர்களுக்கு பதிவுத்தாபலில் திருப்பி அனுப்பப்படும்.

வெற்றிடத்தை நிரப்புவதற்காக மீண்டும் தேவை ஏற்படின் அதற்கான அறிவித்தல் வர்த்தமானி மூலம் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பேன்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

கொழும்பு.
2007, ஏப்பிறல்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக அலுவலகம் | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி தொடர்பான விபரம் |
|---|---|---|---|
| 1. பதுளை | பதுளை | பதுளை நகர பிறப்பு, இறப்பு (வைத்திய) பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2006.04.28 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1443 ஆம் இலக்க வர்த்தமானி |

| மாவட்டம் | பிரதேச செயலக அலுவலகம் | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி தொடர்பான விபரம் |
|---|---|---|---|
| 2. பதுளை | சொரணதொட்ட | சொறனாதொட்ட பிரிவு பிறப்பு, இறப்பு வியலும பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2006.04.28 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1443 ஆம் இலக்க வர்த்தமானி |
| 3. பதுளை | பதுளை | பட்டிபொலை பிரிவு பிறப்பு, இறப்பு யடிகிந்த பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2006.04.28 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1443 ஆம் இலக்க வர்த்தமானி |
| 4. பதுளை | லுணுகல | ஒயபலாத கிழக்கு பிரிவு பிறப்பு, இறப்பு வியலும பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2006.04.28 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1443 ஆம் இலக்க வர்த்தமானி |
| 5. கண்டி | பன்வில | பானதும்பர உடகம்பக கிழக்கு பிரிவு பிறப்பு, இறப்பு பாணதும்பர பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2005.12.23 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1425 ஆம் இலக்க வர்த்தமானி |
| 6. கொழும்பு | கொழும்பு | முகத்துவாரம் பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |
| 7. கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |
| 8. கொழும்பு | கொழும்பு | கொம்பனிவீதி பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |
| 9. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு அரச வைத்தியசாலை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |
| 10. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | வெள்ளவத்தை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |
| 11. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | த சொய்ஸா பெண்கள் வைத்தியசாலை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மூலம்) | 2004.11.19 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை 1368 ஆம் இலக்க வர்த்தமானி |

6-190

---

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

### சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோருதல்

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களில் வெற்றிடங்களாக உள்ள சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய இருப்பதுடன் விண்ணப்பங்கள் 2007.07.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, "சுவசிரிபாய" இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர் பதவி" என்று எழுதப்படுத்தல் வேண்டும்.

1. **சம்பளம்**.- ரூபா 14,930-150X7-240X9-290X10-320X15- ரூபா 25,840 (அ. நி. சுற்றறிக்கை 06/2006- MT-6-2006).

2. **வயது**.- 18வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் தற்பொழுது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருந்தாது.

3. **கல்வி மற்றும் பிற தகைமைகள்**.- *I பட்டப்பின்படிப்பு/ டிப்ளோமா இல்லாதவர்கள் :*

(அ) றோயல் கல்விச் சங்கத்தின் (இங்கிலாந்து) பொது சுகாதார பரிசோதகர் சான்றிதழ் அல்லது களுத்துறை தேசிய சுகாதார கல்வி நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தாதித்துவம் சம்பந்தமான தகுதிச் சான்றிதழ் அல்லது குடும்ப நல உத்தியோகத்தராக இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழ் அல்லது சிறுவர் பற்சிகிச்சை சம்பந்தமான நிவாரண சத்திர சிகிச்சை தகுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் அல்லது கலைத்துறையில் பட்டம் பெற்றிருத்தல் அத்துடன் சுகாதார கல்வி நடவடிக்கைகளில் முழுமையாக ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல்.

*II பட்டப்பின்படிப்பு அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் :*

மேலே 03- I (அ), (ஆ) தகுதிகளுக்கும் மேலதிகமாக அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் சுகாதாரக் கல்வி சம்பந்தமாக பெற்றுக்கொண்ட பட்டப்பின்படிப்பு முதுமாணிப்பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு டிப்ளோமா.

4. **வினைத்திறமைகாண் தடை பரீட்சை**.- இப்பதவிக்கு நியமிக்கப் பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்தினுள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **ஆட்சேர்க்கும் முறைமை**.- தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழு அனுமதித்த புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவதுடன், இப்புள்ளி வழங்கும் திட்டம் பின்வருமாறாகும்.

1. நேர்முகப்பரீட்சை - 10 புள்ளிகள்.

2. முழுமையாக சுகாதாரக்கல்வி உத்தியோகத்தரது பதவியின் கடமைகளை கவனித்தல் (ஒரு வருடத்திற்கும் அதிகமான வருடங்கள் சம்பந்தமாக 05 புள்ளிகள் வீதம் உச்சமாக 25 புள்ளிகள்) 25 புள்ளிகள்.

3. (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப்பின் படிப்பு பட்டம் அல்லது பட்டப் பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ்
   (ii) சமூகசேவை கல்லூரியில் சமூக சேவை சம்பந்தமாக டிப்ளோமா சான்றிதழ் அல்லது அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட இதற்குச் சம மான டிப்ளோமா சான்றிதழ்.
   } 20 புள்ளிகள்.

4. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு சம்பந்தமாக,

   (1) விடயத்துடன் தொடர்புடைய தாக தம்மால் செய்யப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஆய்வு வெளியீடு சம்பந்தமாக ஒன் றுக்கு புள்ளிகள் 05 வீதம் உச்சமாக 15 புள்ளிகள்.

5. சுகாதாரக்கல்வி சம்பந்தமான திட்டங்கள் நிறைவேற்றுதல்.

   (i) தேசிய மட்டத்தில் மதிப்பாய் விற்குட்பட்ட திட்டங்களுக்கு செயற்பாட்டு ரீதியில் பங்க ளிப்பு செய்த ஒரு திட்டத்திற்கு புள்ளிகள் 05 வீதம்.
   (ii) மாகாண மட்டத்தில் மதிப் பாய்விற்குட்பட்ட திட்டம் சம்பந்த மாக ஒரு திட்டத்திற்கு புள்ளிகள் 03 வீதம்.
   (iii) மாவட்ட மட்டத்தில் மதிப்பாய் விற்குட்பட்ட திட்டம் சம்பந்த மாக ஒரு திட்டத்திற்கு புள்ளி கள் 02 வீதம்
   } உச்சமாக 15 புள்ளிகள்

6. மொழி நிபுணத்துவம்.- தாய்மொழி யல்லாத வேறு மொழியில் கடமை யாற்றக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக ஒரு மொழிக்கு புள்ளிகள் 05 வீதம்.

15 புள்ளிகள்

100 புள்ளிகள்

6. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத் திற்குரித்துடையது விதவைகள் அனாதைகள்/விதவைகள் தபுதாரர் ஓய்வூதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்துதல் வேண்டும்.

7. தற்பொழுது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

வைத்திய கலாநிதி எச். ஏ. பி. கஹந்தலியனகே,
செயலாளர்.
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2007, மே 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

*சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்*

1. (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் :-----.
(ஆ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.

2. விலாசம் :-
(அ) தனிப்பட்ட :-----.
(ஆ) அலுவலகம் :-----.

(அரச சேவை/ மாகாண அரச சேவை/ அரசாங்க கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் கடமை புரியும் உத்தியோகத்தர் தமது அலுவலக விலாசத்தைக் குறிப்பிடுதல் வேண்டும் விலாசத்தில் மாற்றம் ஏதும் ஏற்படின் உடன் அறிவித்தல் வேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.

(ஆ) விண்ணப்பிக்கும் கடைசித் திகதியன்று வயது :
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.

4. பால் :-----.

5. கல்வி மற்றும் பிற தகைமைகள் :-----.

6. சுகாதாரக் கல்வி விடயத்தில் உள்ள அனுபவம் :-----.

7. தற்போது வகிக்கும் பதவி சம்பந்தமான விபரம் :-

(அ) பதவி :-----.
(ஆ) திணைக்களம்/ நிறுவனம் :-----.
(இ) நியமனத் திகதி :-----.
(ஈ) நிரந்தரம் / தற்காலிகம் பற்றிய விவரம் :-----.
(உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா என்ற விவரம் -----.
(ஊ) பதவிக்குரிய சம்பளத்திட்டம் மற்றும் தற்போது பெறும் சம்பளம் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதாவது விவரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தேர்வுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் இப்பதவிக்கு பொருத்தமான வரல்ல எனவும் எதுவித நஷ்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படு வதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவிவேன்.

-----
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**அமைச்சில்/ திணைக்களத்தில் சேவையாற்றுபவர்கள் தொடர்பாக அந்நிறுவனத்தின் தலைவரது அறிக்கை**

திரு./ திருமதி/ செல்வி .................................. இந்நிறுவனத்தின் நிரந்தர சேவையில் உள்ளார். இவர் குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு இணங்குகின்றேன்.

-----
அமைச்சு/ திணைக்களத் தலைவரின்
கையொப்பமும், பதவியும்.

திகதி :-----.

6-244

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு
ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு (இதன் பின்னர் '*சேவை*' எனக் குறிப்பிடப்படும்) பொருத்தமான பரீட்சார்த்திகளைச் சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகனத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

2. ***பரீட்சைத் திட்டமும் திகதியும்.***- பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.

பகுதி I - இது பின்வரும் பாடங்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சை ஆவதுடன் இப்பரீட்சை 2007 செத்தெம்பரில் கொழும்பில் நடைபெறும்.

(i) பொது வினாத்தாள்
(ii) உலக விவகாரங்கள் I
(iii) உலக விவகாரங்கள் II
(iv) கட்டுரை
(v) சுருக்கி எழுதுதல்
(vi) இயல்பு திறனும் பொது அறிவும்

பகுதி II- எழுத்து மூலப் பரீட்சையின் ஆறு பாடங்களுக்கும் தோற்றி மொத்தப் புள்ளிகளாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் தீர்மானிக்கத்தக்கதான 300 புள்ளிகளுக்குக் குறையாத, வெட்டுப் புள்ளிகளுக்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் தொகைக்கு ஐந்து மடங்கை விடக் கூடுதலாக இருக்காது. நேர்முகப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

3. ***வெற்றிடங்களின் எண்ணிக்கை.***- இப்பரீட்சையின் பெறுபேறுகளின் முடிவுகளிலிருந்து வெளிநாட்டுச் சேவையின் தரம் III இல் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் திகதியையும் அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கும். பொது நலன் கருதி எந்தவொரு வெற்றிடத்தையோ அல்லது எல்லாவற்றையுமோ நிரப்ப வேண்டிய அவசியமில்லையென ஆணைக்குழு கருதினால் அவ்வாறு செயலாற்ற ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

4. ***பணிக்கமர்த்தும் நியதிகள்.***- (அ) மேற்குறிப்பிடப்பட்ட 3 ஆம் பந்தியின் விதிகளுக்கமைய இப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் பரீட்சார்த்திகள் அரசாங்க சேவையின் நியமனங்

களுக்கான பொதுவான நிபந்தனைகள் மற்றும் 2001 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்புகள் அல்லது அதன்பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது மேற்கொள்ளப் போகும் திருத்தங்களுக்கு அமைய இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெறுவர்.

(ஆ) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

5. **சம்பளம் :**

*சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555.

* வெளிநாட்டுச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பின்வரும் மாதாந்த சம்பள நிலையை அடைய முன் மூன்று தகுதிகாண் பரீட்சைகளில் சித்திபெறல் வேண்டும் :-

| | |
|---|---|
| முதலாவது தகுதிகாண் பரீட்சை | - ரூ. 24,225 |
| இரண்டாவது தகுதிகாண் பரீட்சை | - ரூ. 27,450 |
| மூன்றாவது தகுதிகாண் பரீட்சை | - ரூ. 31,965 |

6. **ஆரோக்கியமும் நல்லொழுக்கமும்.**- விண்ணப்பதாரர் தான் திடமான ஆரோக்கியத்துடனும் நல்லொழுக்கமும் உடையவராக உள்ளார் என்பதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளருக்குத் திருப்திப்படுத்தல் வேண்டும். அவர் உலகின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குரிய உடல் நிலை உள்ளவராக இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படுவோர் விசேட மருத்துவ பரிசோதனை ஒன்றிற்கு உட்படுத்தப்படுவார்.

7. **தகைமை.**- விண்ணப்பதாரர் -

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
அல்லது
(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆவண அத்தாட்சியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதை உடையவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரெனில் அவர் விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவரது சேவைக் காலம் நற்சேவை பதிவுகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்புகள் :**

(i) மேலே கூறப்பட்ட சரத்து 7 (இ) இன் பிரகாரம், ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரென்பது ; விண்ணப்ப முடிவு திகதியன்று அரச சேவையில் (தாபனக் கோவையின் அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டபடி), மத்திய அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தனது சேவையில் உறுதிப்படுத்தப் பட்டவர் என்பதாகும்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருட அரச சேவைக் காலப்பகுதியில் திருப்திகரமான சேவைப் பதிவுகளை அற்றவர் அல்லது ஐந்து வருட சேவைக்கு குறைந்த காலத்தை உடையவராயின் அவர் தனது முழு அரச சேவைக் காலத்திலும் திருப்திகரமான சேவைப் பதிவை அற்றவராயின் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவர்.

(iii) அரச சேவையில் உள்ள ஒருவர் திருப்திகரமான சேவையை உடையவர் என்பது அவர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருடக் காலப்பகுதிக்குரிய தனது சம்பள உயர்ச்சியை உரிய காலங்களில் தவறாது பெற்றுள்ளார் என்பதும் அல்லது ஒருவர் தான் சேவையாற்றிய தாபனங்களில் ஐந்து வருட சேவைக் காலத்திற்குக் குறைவாயின் அம்முழுக் காலத்திற்கும் உரிய சம்பள உயர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் குற்றங்கள் தண்டனை எதுவும் (எச்சரிக்கை தவிர) பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்கள/தாபன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக அண்மையிலுள்ள மாவட்ட செயலகத்தில், பிரதேச செயலகத்தில் அல்லது கொழும்பிலுள்ள திறைசேரியில் "வருமானத் தலைப்பு 2003-20-13" என்ற கணக்கிற்கு செலுத்தப்படல் வேண்டும். இக் கொடுப்பனவிற்காக பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- விண்ணப்பதாரர் ஏதாவது காரணங்களின் நிமித்தம் பரீட்சையிலிருந்து வாபஸ் பெற்றாலோ அல்லது பரீட்சைக்குத் தோற்றி ஆனால் தகுதியற்றவர் எனக் காணுமிடத்து அவரது பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளப்பெற முடியாது.

9. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்பத்திரத்தை இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப, விண்ணப்பதாரர்கள் தாங்களே 8 1/2" x 12" (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழியிலேயே விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும்.

(இ) பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் (அமைப்பும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவும்), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2007, யூலை 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சை 2007" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இடதுபக்க மேல் மூலையில் (2x2செ.மீ.) ஒரு கூண்டு தயாரிக்கப்பட்டு அதனுள் ஆங்கில எழுத்து 'S' எழுதப்பட வேண்டும். இம்முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) முற்றிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபாலில் காணாமற்போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளில் வெளியிடப்படும். பத்திரிகை அறிவித்தல் பற்றி விழிப்பாக இருக்குமாறு விண்ணப்பதாரர்கள் கேட்கப்படுகின்றனர்.

பரீட்சை நடைபெறுவதற்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் பின்வரும் விபரங்களுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்தை, "பரீட்சைத் திணைக்களம், (அமைப்பும் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு), பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (தந்தி முகவரி "எக்ஸாம்ஸ்", பத்தரமுல்லை).

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய திகதியும் பதிவுத் தபால் இலக்கமும் அனுப்பிய அஞ்சல் அலுவலகமும்.

10. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்ற அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் முதல் நாளன்று அப் பரீட்சை மண்டபத்திற்கான அனுமதி அட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டும். பரீட்சார்த்திகளால் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிக் கோவையொன்று இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றத் தேவைப்படும் சகல தகைமைகளையும் கொண்டவர் என்னும் கருத்தைப் பிரதிபலிக்காது.

11. **பரீட்சார்த்தியின் அடையாளத்தை நிரூபித்தல்.**- ஒரு பரீட்சார்த்தி தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தனது அடையாளத்தை பரட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் நரூபிக்க வேண்டப்படுவர். இதற்கான பின்வரும் ஏதேனும் ஒரு சான்றுப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(3) அஞ்சல் அதிபதியினால் அண்மையில் வழங்கப்பட்ட அஞ்சல் அடையாள அட்டை.

12. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது. பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும்பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தி கொடுத்துள்ள தகவல்கள் ஏதாவது அவர் அறிந்தவரை உண்மை அற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே உண்மைத் தகவல்களை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் இடமுண்டு.

13. **பரீட்சை மொழி.**- (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் பரீட்சார்த்தி தான் தேர்ந்தெடுத்த ஒரு மொழியிலேயே பரீட்சையின் எல்லாப் பாடங்களையும் எழுத வேண்டும்.

14. **பரீட்சை முறைமை :**

(அ) **பகுதி I** - எழுத்து மூலப் பரீட்சை. இது பின்வரும் ஆறு (6) பாடங்களைக் கொண்டிருக்கும்.

| | பாடங்கள் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | பொது வினாத்தாள் | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) | உலக விவகாரங்கள் I | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iii) | உலக விவகாரங்கள் II | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iv) | கட்டுரை | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (v) | சுருக்கி எழுதுதல் | 1/2 மணித்தியாலம் | 50 |
| (vi) | இயல்பு திறனும் பொது அறிவும் | 2 மணித்தியாலங்கள் | 100 |

**எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

(i) *பொது வினாத்தாள்.*- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் இலங்கை அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழ்நிலை பற்றிய அவரது அறிவு பற்றியும். இன்றைய தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றியும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் அவரது அறிவைப் பரீட்சிப்பதாகும். பல வினாக்களில் இருந்து தெரிந்து எழுதும் சந்தர்ப்பம் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும்.

(ii) *உலக விவகாரங்கள் I.*- உலக நோக்கான சமாதானம், பாதுகாப்பும் நாட்டு முன்னேற்றமும் மற்றும் இவை இலங்கைக்கு எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பனவற்றையிட்டு ஆராய்ந்து கிரகிக்கும் தன்மையைப் பரீட்சார்த்தி கொண்டுள்ளாரா என்பதனை பரீட்சிப்பதன் நோக்கில், உலகில் இன்றைய அரசியல் வளர்ச்சி, ஐக்கிய நாடுகள் சபை/ அரசாங்கங்களுக்கிடையேயான தாபனங்கள், முரண்பாட்டு சூழ்நிலைகள் மற்றும் தேசிய, சர்வதேச இயக்கங்களின் வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்கியதாக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும். பல வினாக்களிலிருந்து தெரிந்தெழுதும் சந்தர்ப்பம் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும்.

(iii) *உலக விவகாரங்கள் II.*- அண்மைக்காலத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார முன்னேற்றப் போக்குத் துறையில் சர்வதேச/ அரசாங்கங்களுக்கிடையேயான தாபனங்கள்

ஆற்றிய பங்களிப்பு, பிராந்திய பொருளாதார கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தும் தாக்கம், சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தியும் இவை இலங்கைக்கு எவ்வகையில் சம்பந்தப்படுகின்றது போன்றவற்றை உள்ளடக்கியதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும். பல வினாக்களிலிருந்து தெரிந்தெழுதும் சந்தர்ப்பம் பரீட்சார்த்திக்கு வழங்கப்படும்.

(iv) *கட்டுரை*.- குறிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விடயங்கள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுதல் வேண்டும். கட்டுரையானது ஒரு விடய தள படிப்பாக இருக்காது. ஆனால் பரீட்சார்த்தியின் பொது அறிவு வல்லமை மிக்க சிந்தனை மற்றும் சொற் கூற்று, பொது ஆற்றல் போன்றவற்றைக் கணிக்கும் வகையில் கட்டுரை எழுதுதல் அமைந்திருக்கும். கட்டுரை எழுதுவதில் சுயமான கருத்துக்களை அறிமுகப்படுத்தும் திறமை, சுய ஆக்கம், மொழி நடை, அதன் அமைப்பு ஆகியவை மூலம், கட்டுரையின் தன்மை என்பனவும் கணிக்கப்படும். அது தெளிவாகவும் பிழைகள் இன்றியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

*குறிப்பு*.- விடயத்திற்கு உகந்த தன்மையும் தெளிவாகவும் இருத்தலின் அவசியத்தைப் பரீட்சார்த்திகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. விடயத்தை பகுத்து ஆராய்ந்து அறிகின்ற சிந்தனை, தரமான எழுத்து மற்றும் தெளிவும் விளக்கமும் உள்ள கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் உண்டு.

(v) *சுருக்கி எழுதுதல்*.- ஒரு கொடுக்கப்பட்ட பந்தியின் கருத்தைப் புரிந்துகொள்ளும் திறமை மற்றும் அதனைத் திறமையாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தக் கூடிய திறமையைப் பரீட்சிப்பதாக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும்.

(vi) *இயல்வு திறனும் பொது அறிவும்*.- பின்வரும் இரு பாகங்களைக் கொண்டு இவ்வினாத்தாள் அமைந்திருக்கும்.

(அ) பரீட்சார்த்தியின் பகுத்து ஆராய்கின்ற திறமை மற்றும் தர்க்க விவேகம் தொடர்பில் பரீட்சித்தற்கான வினாத்தாள். (காலம் - ஒரு மணித்தியாலம்)

(ஆ) உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரம் ஆகிய துறைகளில் இன்றைய திருப்பங்கள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிக்கும் வினாத்தாளாக அமையும். (காலம் - ஒரு மணித்தியாலம்)

(ஆ) ***பகுதி** II*- நேர்முகப் பரீட்சை.- போதியளவு உயர்மட்டப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால், பரீட்சார்த்திகள் பொதுவான விடயங்களில் நேர்முக உரையாடல் நடைபெறும். இந்த நேர்முக உரையாடலின் நோக்கம் பரீட்சாரத்தி பொறுப்பேற்க உள்ள பதவிக்குப் பொருத்தமானவரா என அவரது தகுதியை மதிப்பிடவும் அத்தகைய மதிப்பீட்டின்போது அவரது விவேகம், மனவிழிப்பு, ஆளுமையில் அவரது தகைமை, ஒழுக்கத்திறன் என்பனவற்றை நேரில் அறிவதற்காகவுமாகும். பரீட்சார்த்தி பிறநாட்டு மொழிகளில் தகைமை, உயர்தரக்கல்வி தகைமை மற்றும் கணினி சாகித்யம் என்பன நேர்முகப்பரீட்சையின்போது கருத்திற்கொள்ளப் படும்.

15. **நியமனத்திற்கு தெரிவுசெய்யும் முறை**.- எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுடன் நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளும் கூட்டப்பட்டு பெற்ற முழுப் புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கான இறுதி முடிவு வெளிநாட்டு அலுவல்கள் செயலாளரின் பரிந்துரைக்கேற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் வழங்கத்தவறிய விடயங்கள் ஏதும் இருப்பின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவூட்டுதல்களுக்கமைய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பாலித ரி. பி. கொஹொன,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
கொழும்பு 1,
2007.05.22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு
ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2007**

பரீட்சை எழுதும் மொழி
(சிங்களம்/ தமிழ் அல்லது
ஆங்கிலம் என கூட்டில் எழுதுக) [ ]

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் :-----.
(ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்)
(ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் :-----.
(சிங்கள/ தமிழ் மொழியில்)

(ii) (அ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.
(ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்)
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
(சிங்கள/ தமிழ் மொழியில்)

2. முகவரி :-
(i) தனிப்பட்ட (ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்) :-----.
(அனுமதி அட்டைகள் இவ் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படும்)

(ii) அலுவலக :-----.

(iii) தொலைபேசி இலக்கங்கள் :-
(அலுவலகம்) :-----. வதிவிடம் :-----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பால் :-----.
ஆண்/பெண்

5. (i) பிறந்த திகதி :-----.
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ii) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-----.
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

6. தேசிய இனம் :-----.

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-----.

8. இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு நியமனம் பெற, முன்னர் விண்ணப்பம் செய்திருந்தால் பரீட்சைக்குத் தோற்றிய திகதி/திகதிகள் குறிப்பிடுக :-----.
(அ) :-----.
(ஆ) :-----.
(இ) :-----.

9. நீர் ஒரு பட்டதாரியும் அரசாங்க சேவையில் இருப்பவராயும் இருந்தால் சேவையின் பெயரைக் குறிப்பிடுக :-----.

10. பல்கலைக்கழக விபரங்கள் :-----.
(அப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ளீரா என்பதை உறுதி செய்ய தயவுசெய்து இவ்வறிவித்தலின் 7 (i) மற்றும் (ii) பந்திகளைக் கவனிக்கவும்)
(i) பல்கலைக்கழகத்தின் பெயர் :-----.
(ii) பட்டப்படிப்பு :-----.
(iii) பட்டபெற்ற திகதி :-----.
(iv) பொது/விசேடம் :-----.
(v) பாடங்கள் :-----.
(vi) வகுப்பு :-----.

11. உங்கள் விண்ணப்பத்திற்காதாரமான வேறு, கல்லூரி, பல்கலைக்கழக/உத்தியோகபூர்வ தகைமைகள் (பின்பட்டதாரி/டிப்ளோமா, பிறநாட்டு மொழிகளில் சாகித்தியம் பெற்ற ஆவணங்கள் என்பன) இருப்பின் விபரங்கள் தருக :-----.

12. எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று உறுதிசெய்வதுடன் நான் பரீட்சைக் கட்டணம் செலுத்திய ...................... திகதி ............. இல. .................... பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன். நான் இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைய நடப்பேனென்றும், இப்பிரமாணங்களுக்கமைய நான் தகைமையற்றவராகக் காணப்படுமிடத்து பரீட்சைக்கு முன்போ, பரீட்சையின்போதோ அல்லது பின்போ பரீட்சார்த்தி நிலையிலிருந்து என்னை நீக்குவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படப் பட்டுள்ளேன் எனவும் இணக்கம் தெரிவிக்கின்றேன்.

| |
|---|
| தயவுசெய்து பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும். |

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

13. **திணைக்கள/நிறுவனத் தலைரின் சான்றிதழ் :**
(ஏற்கனவே அரசாங்க சேவை/மாகாண சபை அரச சேவை களில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும்)

திரு./திருமதி/செல்வி ................................................................... 2007 ........... ஆந் திகதிக்கு முன்னுள்ள ஐந்து வருடங்களில் (அ) தனது சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார் என்பதையும் (ஆ) எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதனையும் பதிவேடுகளிலிருந்து ஊர்ஜிதம் செய்துகொண்டேன்.

விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

உத்தியோகத்தர் தெரிவாகுமிடத்து அவர் தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

.........................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

6-187

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.